# Deposition of witness
(Chapter XXIII Code of Civil Procedure)
In the Court of Subordinate Judge, Vaniyambadi, Tirupattur District

| | |
|---|---|
| Name | :Selvam |
| Father's Name | :Subramani |
| Village | :Konamedu |
| Taluk | :Vaniyambadi |
| Caste | :- |
| Calling | :- |
| Religion | :Hindu |
| Age | :60 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 28.01.2026.

MCOP.No.36/2024 PW1 Name:**செல்வம்**

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

மனுவில் தாக்கல் செய்துள்ள முதல் தகவல் அறிக்கை நகல் ம.சா.ஆ.1 ஆகவும், விபத்து பதிவேட்டு நகல் ம.சா.ஆ.2 ஆகவும், டேக்ஸ் இன்வாய்ஸ் நகல் ம.சா.ஆ.3 ஆகவும், காப்பீட்டு சான்று நகல் ம.சா.ஆ.4 ஆகவும், ஓட்டுநர் உரிமம் நகல் ம.சா.ஆ.5 ஆகவும், மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை நகல் ம.சா.ஆ.6 ஆகவும், ஆதார் அடையாள அட்டை நகல் ம.சா.ஆ.7 ஆகவும், மருத்துவமனை வெளியேற்றுகை குறிப்பு நகல்கள் ( 2 எண்ணிக்கைகள்) ம.சா.ஆ.8 ஆகவும், மருத்துவமனை ரசீதுகள் ( 2 எண்ணிக்கைகள்) ம.சா.ஆ.9 ஆகவும், குறியீடு செய்யுமாறு வேண்டுகிறேன். மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

விபத்திற்கு பின் நான் எந்த வேலைக்கும் செல்வதில்லை. விபத்து சமயத்தில் நான் சுமார் 19,000/–லிருந்து 20,000/–வரை மாதம் சம்பளம் பெற்றேன். அதை கையில் ரொக்கமாகதான் வாங்குவேன். என்னுடைய தொழில் வருமானத்தை காட்டகூடிய ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை. ஆம்பூரிலிருந்து வாணியம்பாடி செல்லும் தேசியநெடுஞ்சாலையில் இரவு 7.30 மணிக்கு விபத்து நடந்தது. நான் ஓட்டிவந்த வண்டி என்னுடைய உறவினருக்கு சொந்தமானது அவரது பெயர் நியாபகம் இல்லை. அந்த வாகனம் காப்பீடு செய்யபட்டுள்ளதா என்ற விவரம் எனக்கு தெரியாது. விபத்து சமயத்தில் எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை. பின்னால் வந்து மோதிய வாகனம் லாரி ஆகும். விபத்து ஏற்பட்டவுடன் நான் மயக்கமடைந்ததால் அந்த வாகனத்தின் எண்ணை கவனிக்கவில்லை. விபத்து ஏற்படுத்திய வாகனம் மோதியவுடன் நிற்காமல் சென்றுவிட்டது. விபத்து ஏற்பட்டவுடன் எனக்கு பகுதியாக சுயநினைவு இருந்தது. என் கம்பெனியில் வேலை செய்யும் மேனெஜர்தான் என்னை மருத்துவமனைக்கு கூட்டிசென்றார். டேவிட் மருத்துவமனை தவிர வேறு மருத்துவமனையில் நான் சிகிச்சை எடுக்கவில்லை. மருத்துவமனையில் விபத்து எப்படி ஏற்பட்டது என்ற விவரத்தை நான் தான் கூறினேன். சுமார் 4, 5 நாட்கள் கழித்துதான் போலிசார் வந்து விசாரித்தார்கள். விபத்து ஏற்படுத்திய வாகனத்தை மேனெஜர் சொல்லி போலிசார் தெரிந்துகொண்டார்கள். அந்த வாகனத்தை டோல்கெட் அருகில் பிடித்துள்ளார்கள். நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ ஆவணங்கள் வழக்கிற்காக தயார் செய்யபட்டவை

என்று சொன்னால் சரியல்ல. மருத்துவமனை நிர்வாகத்தை நான் விசாரணை செய்ய உள்ளேன். என்னுடைய அஜாக்கிரதை, கவனக்குறைவால்தான் விபத்து ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. காப்பீடு செய்யாத வாகனத்தை நான் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் ஓட்டிச்சென்றுள்ளது மோட்டார் வாகன விதிமுறைகளுக்கு எதிரானது என்று சொன்னால் சரியல்ல. விபத்தின்போது நான் தலைகவசம் அணியாமல் சென்றுள்ளதும் மோட்டார் வாகன விதிமுறைகளுக்கு எதிரானது என்றால் சரியல்ல. நான் ஓட்டிச்சென்ற வாகனத்தின் உரிமையாளரையும் அதன் காப்பீட்டாளரையும் வழக்கில் கட்சி சேர்க்கவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக இழப்பீடு எதுவும் கேட்கமுடியாது என்று சொன்னால் சரியல்ல. வழக்கிற்காக என்னுடைய வருமானத்தை மிகைபடுத்தி கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. மனு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 28/01/2026 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்–கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.01.28 17:11:25 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.